2014 ஆகஸ்ட் 12]

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் து. முருகேசன் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 418, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

418—

சூரிய மின்வேலி

***20675—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகம், ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் சூரிய மின்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் ரூ.40 இலட்சம் செலவில் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகம், ஊடேதுர்க்கம் காப்புக் காடு வனப் பகுதிகளிலிருந்து வன விலங்குகளும், காட்டு யானைகளும் குடியிருப்புப் பகுதிகளில் புகுந்து விவசாயிகளுடைய நெல், வாழை, கரும்பு, தக்காளி என இந்த ஆண்டில் மட்டும் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. யானைகள் தாக்கி எட்டு பேர் உயிரிழந்திருக்கிறார்கள்; நான்கு பேர் கை, கால் இழந்திருக்கிறார்கள். அங்கு சூரிய மின்வேலி என்பது முழுமையாக அமைக்கப்படவில்லை. ஆகவே, முழுமையாக சூரிய மின்வேலி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மனித, வன உயிரினங்கள் மோதல்களைத் தடுக்கவும், வனத்தையொட்டி வாழும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்கும் வகையிலும் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட 16 மாவட்டங்களில் ரூ.23.18 கோடி ரூபாய் செலவில் 1,422 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலிகள் அமைத்தும், 52 கோடி ரூபாய் செலவில் 1,011 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானைகள் புகா அகழிகள் வெட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மேலும், வன உயிரினங்கள் உணவு மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காகக் காடுகளைவிட்டு வெளியே வாராவண்ணம் தடுக்க, கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள், ஆழ்குழாய்க் கிணறுகள், சூரிய மின்சக்தி மோட்டார்மூலம் நீர்நிலைத் தொட்டிகள் அமைத்தல்,

தீவனப் பயிர்கள் வளர்ப்பு போன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்காக 20.87 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்காரணமாக மனித, வன உயிரின மோதல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் கூறிய கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதியில் சூரிய மின்வேலி அமைக்கும் திட்டம், வன உயிரினங்கள் காட்டைவிட்டு முற்றிலும் வெளியேறுவதைத் தடுக்க இயலாத நிலையில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூபாய் ஒரு கோடியே 58 இலட்சம் செலவிலே யானைகள் புகா அகழிகள், தீவனத் தோட்டங்கள் சூரிய மின்சக்தி மோட்டார் பொருத்திய ஆழ்துளைக் கிணறுகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மேற்கொள்ளப்பட்டு, சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 419, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

419—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாசுபடுதலைத் தடுத்தல்

***32378—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியிலுள்ள ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் புகையினால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாசலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு